**செய்தி வெளியீடு எண்: 327** **நாள்: 13.05.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (13.5.2018) ஈரோடு மாவட்டம், பவானி அரசு மேல்நிலைப் பள்ளி ஆண்டு விழா, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை**

இன்றைய நிகழ்ச்சியின் வாயிலாக காலிங்கராயன் மணிமண்டபம் திறப்புவிழா மற்றும் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி ஆண்டுவிழா, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டு விழா ஏற்கனவே நடைபெற்றிருந்த முடிவுற்ற திட்டப் பணிகளுக்கு துவக்க விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற சிறப்பான, எழுச்சியான இந்த நிகழ்ச்சிக்கு தலைமையாற்றி, தலைமையுரையாற்றிய மாண்மிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே சிறப்பான அத்தனை கருத்துக்களையும் அள்ளி அழகாக நல்ல பல கருத்துக்களை எடுத்து வைத்திருக்கின்ற உங்களுடைய சட்டப் பேரவை உறுப்பினர் மாண்புமிகு சுற்றுச்சூழல் அமைச்சர் திரு.கே.சி.கருப்பணன் அவர்களே, இந்த நிகழ்ச்சியை சிறப்பிப்பதற்காக வருகை தந்துள்ள மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்களே, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்களே, மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு. கே.பி.அன்பழகன் அவர்களே, மாண்புமிகு சமூகநலன் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர் மருத்துவர் வி.சரோஜா அவர்களே, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்களே, மற்றும் இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சத்தியபாமா அவர்களே, திரு.பி.கோபாலகிருஷ்ணன் அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற முன்னாள் அமைச்சர், சட்டப்பேரவை உறுப்பினர் திரு.ராமலிங்கம் அவர்களே, திரு.சிவசுப்பிரமணியன் அவர்களே, தலைமைச் செயலாளர் அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற காலிங்கராயன் அவர்களது வாரிசுதாரர்களே, அம்மா பேரவை ஒன்றிய கழகச் செயலாளர்களே மற்றும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு தலைவர் திரு.விஸ்வநாதன் அவர்களே, மற்றும் இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டிருக்கின்ற பவானி ஒன்றிய அவர்களே, அம்மா பேரவை ஒன்றிய கழகச் செயலாளர் அவர்களே, பவானி ஒன்றிய கழகச் செயலாளர் மற்றும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே, வருகை தந்திருக்கின்ற அரசு உயரதிகாரிகளே, மேடையிலே

வீற்றிருக்கின்ற கழகத்தின் முன்னாள் நிர்வாகிகளே, ஒன்றிய நகர, பேரூராட்சி, ஊராட்சி கழகத்தினுடைய நிர்வாகிகளே, கழக உடன்பிறப்புக்களே, கழகத்திலே பல்வேறு பொறுப்புக்களை வகிக்கின்ற நிர்வாகிகளே, பெரியோர்களே, தாய்மார்களே, நலத்திட்ட உதவி பெறுகின்ற பெரியோர்களே, பத்திரிகையாளர்களே, ஊடக நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் பணிவான வணக்கத்தை தெரிவித்து இன்றைய தினம் வரலாற்று சிறப்புமிக்க காலிங்கராயன் அவர்களுடைய திருவுருவச் சிலையை திறந்திருக்கின்றோம். இது ஒரு வரலாறு சிறப்புமிக்க நிகழ்வு. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்திலேயே காலிங்கராயன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கவேண்டும் என்பதற்காக நிதிஉதவிகளை செய்து அந்தப்பணி தொடங்கப்பட்ட நிலையில், இன்றைக்கு காலிங்கராயன் மண்டபம் கட்டப்பட்டு அனைவருடைய ஆசியோடு, ஒத்துழைப்போடு இன்றைக்கு திறந்திருக்கின்றோம். ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் பவானி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி 1899ஆம் ஆண்டு இந்தப் பள்ளி துவக்கப்பட்டது. 119 ஆண்டுகள் பழமை வாய்ந்த பள்ளி இந்த பவானி அரசு மேல்நிலைப்பள்ளி. 1978 ஆம் ஆண்டு இந்தப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது. இன்றைக்கு 1978 முதல் மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இந்த சிறப்பு வாய்ந்த பள்ளிதான் என்னையும் உருவாக்கி உங்களிடம் நிறுத்தியிருக்கிறது. நான் இந்தப் பள்ளியில் 1967 ஆம் ஆண்டு 6–ஆம் வகுப்பிலே சேர்ந்து 11–ஆம் வகுப்பு எஸ்.எஸ்.எல்.சி வரை இந்த பள்ளியிலே விடுதியில் தங்கி படித்தேன். என்னோடு பலபேர் இங்கே தங்கியிருந்தார்கள். ஆறாண்டு காலம் இந்தப் பள்ளியிலே சுற்றி சுற்றித் திரிந்தவன் நான். விளையாட்டு மைதானம் முழுவதும் சுற்றித் திரிந்தவன் நான். அப்பொழுது எங்களுடைய ட்ரில் மாஸ்டர் மரியாதைக்குரிய பெரியவர் திரு குப்புசாமி அவர்கள் இருந்தார், அந்தக் காலம் ஒரு பொற்காலமாக இருந்தது. நல்ல உயர்வு கொண்ட உள்ளம் கொண்ட ஆசிரியர் பெருந்தகைகள் எல்லாம் எங்களுக்கு ஆசிரியர்களாக இருந்து அவர்கள் போதித்த பாடங்களை கற்று, இன்று இந்த நிலைக்கு உயர்ந்திருக்கின்றோம் என்று மகிழ்ச்சியோடு இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பள்ளியை வரலாற்று சிறப்புமிக்க பள்ளியாக நான் கருதுகீன்றேன். ஒரு தமிழகத்தினுடைய முதலமைச்சராக உருவாக்கிய இந்தப் பள்ளிக்கு இந்த பெருமை சாரும் என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். இந்தப் பள்ளியிலே படித்த மாணவர்கள் வெளிநாடுகளில் உயர்கல்விக்கு சென்றிருக்கிறார்கள், பல அறிஞர்களை தோற்றுவித்த பள்ளி இந்தப் பள்ளி.

2016–2017 ஆம் ஆண்டில நடைபெற்ற 10–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில், இப்பள்ளியில் பயின்ற மாணவர்கள் 500 மதிப்பெண்களுக்கு 490 மதிப்பெண் பெற்று பள்ளிக்கு பெருமை சேர்த்துள்ளனர். மேலும் 480 மதிப்பெண்களுக்கு மேல் 5 மாணவர்கள் பெற்றிருக்கின்றார்கள்,400 மதிப்பெண்களுக்கு மேல் 40 க்கு மேற்பட்ட மாணவர்கள் பெற்று

சாதனை படைத்துள்ளனர். 12 ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் கடந்த ஆண்டில் 1200க்கு 1126 மதிப்பெண்கள் பெற்று இப்பள்ளிக்கு மேலும் பலர் பெருமை சேர்த்துள்ளனர். அவர்களுக்கு என் வாழ்த்துக்களை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இப்பள்ளியில் பயின்ற மாணவர்கள் உடற்கல்வித் துறையில் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் பங்கு பெற்று பல அரிய சாதனைகளைப் புரிந்துள்ளனர். மாண்புமிகு அம்மா அவர்களும் அவரது வழிவந்த மாண்புமிகு அம்மாவின் அரசும் கல்வித் துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. ஆகவே, இந்த கல்வித்துறைக்கு முக்கியயத்துவம் கொடுக்கின்ற வகையிலே உங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்கள் பள்ளித்துறைக்கு அமைச்சராக வந்திருக்கின்றார். இது இந்த மாவட்டத்திற்கு கிடைத்த பெருமை. புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கண்ட கனவுகள் எல்லாம் இன்றைக்கு நனவாக்கப்பட்டு வருகின்றன. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011 முதல் 2016 வரை தமிழகத்தினுடைய முதலமைச்சராக பொறுப்பேற்று சிறந்த ஆட்சி செய்தார்கள். அந்த காலகட்டத்தில், கிராமங்களிலிருந்து நகரம் வரை ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, அடித்தளத்திலே வாழ்கின்ற மக்களுக்குக் கூட அந்தப் பகுதியிலே கல்வி கிடைக்க வேண்டும் என்பதற்காக 221 தொடக்கப் பள்ளிகள் துவங்கப்பட்டன. 112 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகளாகவும், 810 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 402 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டன. இன்றைக்கு தமிழகம் கல்வியிலே சிறந்த மாவட்டமாக திகழ்ந்திருக்கிறது என்று சொன்னால், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கைகள்தான் காரணம். இந்தியாவிலேயே அதிக பள்ளிகளை உருவாக்கிய மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை அம்மா அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அம்மாவின் அரசும் கடந்த இரண்டாண்டுகளில் 6 தொடக்கப் பள்ளிகளை துவக்கியுள்ளது. 4 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 169 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் , 102 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டன. மாண்புமிகு அம்மா அவர்கள் விட்டுச் சென்ற பணியினை அம்மாவின் அரசு தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டு ஏழை, எளிய மக்களுக்கு அம்மாவின் அரசு தொடர்ந்து நல்ல கல்வியை கொடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்து பள்ளிகளிலும் மாணாக்கர்களின் கல்வி வசதியை மேம்படுத்தும் வகையிலும், கற்பதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கும் வகையிலுமூ, உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பள்ளிக் கல்வித்துறையில் மாணவர்களின் படிப்பு எவ்வித பாதிப்புமுன்றி சீராக நடைபெறுவதற்கு ஏதுவாக கடந்த 7 ஆண்டுகளில் சுமார் 58 ஆயிரத்து 691 ஆசிரியர்கள் பணி நியமனம்

செய்யப்பட்டுள்ளனர். கடந்த கால ஆட்சியிலே, ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருந்தன.அதனால் மாணவர்களின் தேர்ச்சி சதவிகிதம் குறைந்து இருந்தது.

கல்லாதவர்களே தமிழ்நாட்டில் இருக்கக்கூடாது என்பதே எனது கோட்பாடாகவும், எனது அரசின் குறிக்கோளாகவும் அமைந்துள்ளது என்று புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வாக்கிக்கேற்ப, வசதி படைத்த குழந்தைகளுக்கு என்ன கல்வி கிடைக்கின்றதோ அதே கல்வியை ஏழை, எளிய, தாழ்த்தப்பட்ட மாணாக்கர்களும் பெற வேண்டுமென்ற நோக்கத்தில், மாணக்கர்களுக்கு விலையில்லா புத்தகங்கள், புத்தகப் பை, சீருடைகள், காலணிகள், எழுதுபொருட்கள் உட்படி 14 வகையான நலத்திட்ட பொருட்கள் மாணாக்கர்களுக்கு விலையின்றி வழங்கப்பட்டு வருகின்றன.

மாணவர்களுக்கு பள்ளிக்கு சென்றுவர வசதியாக மிதிவண்டி, கற்றலை எளிதாக்கி இணையதளம் மூலம் கல்வி பயில வசதியாக 36 லட்சம் மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்திய வரலாற்றில் எங்கும் கிடையாது. இன்றைக்கு இந்தியாவிலே சிறந்த கல்வி நம்முடைய மாநிலத்தில் தான் கிடைக்கிறது. ஒரு விஞ்ஞான கல்வியை நம்முடைய மாணவர்களுக்கு கொடுத்தால், நம்முடைய மாணவர்களும் போட்டியிலே வெற்றி பெறமுடியும். விஞ்ஞான உலகத்தை நம்முடைய தமிழ்நாடு மாணவர்கள் படைப்பார்கள்.

இந்த நேரத்திலே ஒரு சிறிய கதையை தெரிவிக்க விரும்புகின்றேன்.

ஒரு இளைஞர் குருவிடம் பயிற்சி பெறச் சென்றான். சென்ற முதல் நாளேஅந்த குரு அந்த இளைஞரிடம் ‘‘பயிற்சி என்பது நான் சொல்லித் தெரிவதைவிட நீ அனுபவத்தில் புரிந்து கொள்வது மிகவும் நல்லது’’ என்றார். அந்த இளைஞரும் குருவைப் பார்த்து, ‘‘உங்களைப் பார்த்து விரைவில் தெரிந்து கொள்வேன் குருவே’’ என்றார். உடனே, குருவைப் பின்பற்ற ஆரம்பித்த அந்த இளைஞர், குருவின் செயல்கள் அனைத்தையும் அப்படியே பின்பற்ற ஆரம்பித்தார். அத்துடன் அதை குருவீடமும் தெரிவித்தார். அதற்கு அந்த குரு, ‘‘என்னை அப்படியே பின்பற்றினால், அது மிகவும் தவறு. இதை விரைவிலேயே நீ தெரிந்து கொள்வாய்’’ என்றார். ஒரு நாள் தியானம் செய்து துடித்த குரு, ஆற்றின் மீது தண்ணீரில் நடந்து மறு கரைவை அடைந்தார். இதைப் பார்த்த அந்த இளைஞர், ‘‘ தியானம் செய்தால், நாமும் தண்ணீரில் நடக்கலாம்’’ என்று நினைத்து தியானம் செய்துவிட்டு தண்ணீரில் நடக்க முனைந்தார். ஆனால், ஆற்றில் கால் வைத்த அடுத்த விநாடியே தண்ணீரில்அடித்துச் செல்லப்பட்டான். உடனே, ‘‘என்னைக் காப்பாற்றுங்கள் குருவே’’ என அலறினார். அந்த இளைஞரைக் காப்பாற்றி கரைக்கு அழைத்து வந்த குரு, ‘‘ஆற்றில் கால் வைத்து நடக்க எந்தெந்த தடங்களில் கற்கைப் புதைத்து வைத்திருக்கிறார்கள் என்பதை தெரிந்து வைத்திருக்க வேண்டும். கண்மூடித்தனமாக என்னை பின்பறறக்கூடாது. எப்போதும் சிந்தித்து செயல்பட வேண்டும்’’ என்று அறிவுறுத்தினார். அதுபோலத்தான், இளைஞர்கள் யாரையும்

கண்மூடித்தனமாக பின்பற்றக் கூடாது. எதற்காக சொல்கிறேனென்றால், பலபேர் ஏதேதோ பேசுகின்றார், யார் என்றெல்லாம் உங்களுக்குத் தெரியும். ஆகவே, இளைஞர்கள் நன்றாக தெரிந்து பின்பற்ற வேண்டும் என்று தெரிவத்துக் கொள்கிறேன். எந்த ஒரு விஷத்தையும் சிந்தித்து சரியான பாதையிலே செயல்பட வேண்டும். அப்போதுதான் நாம் நினைத்த மாதிரியான வெற்றிகளை நாம் அடைய முடியும் என்பதை வழங்கால இந்தியாவின் சிற்பிகளான நீங்கள் எல்லாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த பள்ளி ஆண்டு விழாவில், ஈரோா மாவட்டத்திற்கு நீர் வழங்கும் திட்டத்தை செயல்படுத்திய திரு.காலிங்கராயன் அஅர்களின் மணி மண்டபத்தையும் திறந்து வைத்துள்ளேன் எனபதை நினைத்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

விவசாத்திற்கு இன்றையமையாததாக விளங்கும் நீர் கிடைக்கப் பெறும் வகையில், அணைக்கட்டுகளை உருவாக்கிய பெரியோர் நினைவைப் போற்றும் வகையில், மணி மண்டபங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு அமைத்து வருகிறது.

அந்த வகையில், முல்லைப் பெரியாறு அணையை உருவாக்கிய கர்னர் பென்னிகுயிக் அவர்களுக்கு நினைவு மண்டபமும், ளெகாள்ளிடம் ஆற்றின் குறுக்கே கல்லணையைக் கட்டிய கரிகால் பெருவளத்தான் அவர்களுக்கு மணிமண்டபமும் அமைக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் பல பகுதிகள் பாசனம் பெற நற்பணி ஆற்றியவர் காலிங்கராயன் அவர்கள் ள்வார். ஈரோடு மாவட்டத்தின் அணிகலனாகத் திகழ்வது காலிங்கராயன் கால்வாய் ஆகும். இந்த காலிங்கராயன் கால்வாயைக் கட்டிய பெருமை திரு.லிங்கையன் என்கிற காலிங்கராயன் அவர்களையே சாரும். திரு.காலிங்கராயன் பாண்டிய நாட்டு தலைவரான பிறகு தன் ஆளுகைக்கு உட்பட்ட புஞ்சை நிலங்களை நன்செய் நிலங்களாக மாற்ற வேண்டுமென திட்டமிட்டு, நாட்டு மக்களின் உதவியுடன் காலிங்கராயன் அணையினைக் கட்டி கால்வாயினையும் வெட்டினால் என்பது வரலாறு.

காவேரி ஆற்றின் கிளை நதிகளான பவானியையும், நொய்யலையும் இணைக்கும் கால்வாய் காலிங்கராயன் கால்வா.. இதன் மூலம் பவானி ஆற்றிலிருந்து நீர் பிரித்தெடுக்கப்பட்டு, காவேரி ஆற்றின் ஓரமாகவே, அதன் தென் கரையில் சுமார் 56 மைல்கள் கிழக்காக ஒடி ஆவுடையார் பாறை என்ற இடத்தில் நொய்யல் ஆற்றில் இணைகிறது.

பவானி ஆற்றை நொய்யல் ஆற்றுடன் இணைப்பதற்கு 32 மைல் தூரம் கால்வாய் வெட்டினால் போதும் என்ற நிலை இருந்த போதிலும், அதிகமான நிலங்கள் பாசனம் பெற வேண்டும் என்ற நோக்கத்துடனும், நீர் தேங்கி நின்று வயலுக்கு பாய வேண்டுமென்ற எண்ணத்துடனும், நீரின் வேகத்தைக் குறைத்து கரைக்கு வெள்ளத்தினால் ஏற்படும் அழிவுகள் தடுக்கப்பட வேண்டும் என்பரைதக் கருத்தில் கொண்டும், 56 மைல் தூரத்திற்கு இந்தக் கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது.

கால்வாயின் இரு கரைகளும் காரையால் கட்டப்பட்டு இருப்பதால், ''காரை வாய்க்கால்'' என்றும், பாம்பு கோல் நெளிந்து செல்வதால், ''கோண வாய்க்கால்'' என்றும் இதனை அப்பகுதி மக்கள் அழைக்கின்றனர். இதன் மூலம், ஈரோடு மாவட்டத்திலுள்ள 15 ஆயிரத்து 743 ஏக்கர் நிலம் தற்போது பாசன வசதி பெற்று வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட வலுவான அணையினையும், கால்வாயினையும் கட்டிக் கொடுத்தவரும், நதிகள் இணைப்பில் முன்னோடியாக விளங்கியவரும், மக்களுக்கு பல அறப்பணிகளை செய்தவருமான திரு.காலிங்கராயன் அவர்களுக்கு சிலை அமைக்க வேண்டும் என்றும், காலிங்கராயன் அணைக்கட்டுப் பகுதியினை சுற்றுலாத் தலமாக மாற்ற வேண்டும் என்றும், அப்பகுதி மக்கள் மாண்புமிகு அம்மா அவர்களிடம் கோரிக்கை விடுத்தனர்.

அக்கோரிக்கையினை ஏற்ற மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், 2016 ஆம் ஆண்டு சட்டப் பேரவையில் திரு.காலிங்கராயன் அவர்களுக்கு மணி மண்டபம் அமைக்க ஆணையிட்டார். அதன்பேரில், ஈரோடு மாவட்டம், பவானி காலிங்கராயன் அணைக்கட்டு பகுதியில் பொதுப்பணித் துறையின் சார்பில் ஒரு கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மணி மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மணி மண்டபத்தில் சுமார் 7 அடி உயரத்தில் காலிங்கராயன் அவர்களது முழு உருவ வெண்கல சிலை அமைக்கப்பட்டுள்ளது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த காலிங்கராயன் சிலையையும், மணி மண்டபத்தையும் திறந்து வைத்ததில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

வருங்காலத்தில் திரு.காலிங்கராயன் அவர்களின் நினைவைப் போற்றும் வைகிய்ல ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அரசு சார்பில் விழா கொண்டாடப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈரோடு அரசு பொது மருத்துவமனை அருகில் 64 கோடியில் உயர்மட்ட பாலம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஈரோடு மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தை விரிவுபடுத்த ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. ஈரோடு வெளிவட்ட சாலை நிறைவு பெறும் நிலையில் இருக்கின்றது. ஈரோடு மாவட்டத்தில் மட்டும் பல்வேறு சாலைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

புரட்சித்தலைவி அம்மா ஆட்சிக்காலத்தில், சென்னையிலே தொழில் முதலீட்டாளர் மாநாடு நடத்தி சுமார் 2,42,160 கோடி ரூபாய் ஈர்க்கப்பட்டது. அதன் காரணமாகத்தான் புதிய, புதிய தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் வந்து கொண்டிருக்கின்றன. பவானியிலிருந்து மேட்டூர் வரை, மேட்டூரிலிருந்து தொப்பூர் வரை 45 மீட்டர் அகலத்தில் நான்ன் வழிச்சாலை அமைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மேட்டுப்புறத்திலிருந்து சத்தியமங்கலம் வரை, சத்தியமஙகலத்திலிருந்து கோபிசெட்டிப்பாளையம் வரை கோபிச்செட்டி பாளையத்திலிருந்து சித்தூர் வரை ஆகிய இடங்களுக்கு நான்கு வழிச்சாலை அமைக்கப்படும்

என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சத்தியமங்கலம்–அத்தானி–பவானி வரை சாலை விரிவுபடுத்தப்பட இருக்கின்றது. ஈரோட்டிலிருந்து கரூர்வரை நான்கு வழிச்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஈரோட்டிலிருந்து திருச்செங்கோடு வரை நான்கு வழிச்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மாண்புமிகு அம்மாவின் அரசு அவினாசி–அத்திக்கடவு திட்டத்தை மாநில அரசு நிதியிலிருந்து செயல்படுத்தப்படும். இதனால் திருப்பூர், ஈரோடு மற்றும் கோவை மாவட்டம் ஆகிய மூன்று மாவட்ட விவசாய பெருமக்கள் பயன்பெறுவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

விசைத்தறி நெசவாளர்களுக்கு 750 யூனிட் மின்சாரம் விலையில்லாமல் கொடுக்கிறோம். நெசவாளர்களை காப்பாற்றக்கூடிய அரசு அம்மாவினுடைய அரசு.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு பள்ளிக் கல்வித் துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதுபோல, கல்வியிலே ஒரு புரட்சி ஏற்படுத்த வேண்டும். இன்றைக்கு ஒன்றாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பாடத்திட்டத்தை மாற்றிக் கொடுத்திருக்கிறோம். நான்கு வகுப்பிற்கு இந்த ஆண்டு பாடத்திட்டத்தை மாற்றிக் கொடுத்திருக்கின்றோம். இந்தியாவிலேயே தமிழகத்திலே தான் சிறந்த கல்வி கிடைக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 2247 கோடி ரூபாய் வழங்கிய அரசு அம்மாவின் அரசு. அதேபோல காப்பீட்டு திட்டத்தின் மூலமாக 3200 கோடி ரூபாய் பெற்றுத் தந்த அரசு அம்மாவின் அரசு. இன்றைக்கு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசுதான் அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்கிக் கொண்டிருக்கிறது.

2006 முதல் 2011 வரை கடுமையான மின்வெட்டு இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாண்டு காலத்தில் தடையில்லா மின்சாரத்தை வழங்குவேன் என்று சட்டமன்றத்தில் சூளுரைத்தார்கள். அவர்களது முயற்சியின் காரணமாக இன்றைக்கு அம்மாவினுடைய அரசு மின்சாரத் துறை தன்னிறைவு பெற்றுள்ளது.

மானிய விலையில் பணிக்கு செல்லும் மகளிர்களுக்கு இருசக்கர வாகனம் வழங்கப்படும் திட்டம் மிகச் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த ஆண்டுவிழாவிற்கு வரும் போது அளித்த கோரிக்கைகளை அம்மாவினுடைய அரசு நிறைவேற்றித் தரும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, 1000 மாணவர்கள் அமரக்கூடிய புதிய கலையரங்கம் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பள்ளியின் பராமரிப்பு பணிக்காக நிதி ஒதுக்கீடு செய்து கொடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டிக்

கொடுக்கப்படும் என்பதையும் இதற்கெல்லாம் ஒட்டுமொத்தமாக ஒரு கோடி ரூபாய் நிதியை வழங்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நடமாடும் வாகனத்தில் ஏடிஎம் கருவி மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் தலைமையேற்று செய்தார்கள். இன்றைக்கு இப்பகுதி மக்கள் மிகச் சிறப்பாக, எழுச்சியாக, மகிழ்ச்சியோடு என்னை வரவேற்றது என் மனதை நெகிழ வைத்தது என்பதைத் தெரிவித்து வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

---

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**